புதுமலர்: 08 இதழ்: 02

பங்குனி - சித்திரை

# அனல்

இணை ஆசிரியர்கள்

* யோ.நிக்ஷன்
* வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.03.2011

# பொருளடக்கம்


* அனலின் குரல்
* மூன்று காரியங்கள்
* கதையும் கற்றதும் - நல்ல தெரிவு
* மெய்யான பாதுகாப்பு
* வினா விடை - 44
* வாலிபர் வளாகம் - கனவுகள் ஏராளம்
* நற்செய்தி - யாரால் முடியும்?
* பக்தர்களின் பயிலகம்
* அருட்பணியாளர் சரிதை
* மூவரி முத்துக்கள்
* அனலின் அன்பின் செய்தி
* குறுக்கெழுத்துப்போட்டி - 42


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


***திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11***

# அனலின் குரல்



**நே**ற்றும் இன்றும் என்றும் மாறாத தேவன் தம் கிருபையால் இம்மட்டும் கடந்துவர பெலன், திடன், சுகம் தந்தபடியால் அவரை ஸ்தோத்தரிக்கின்றோம்.

புத்தாண்டின் புதுமலருடாக சந்தித்த உங்களை மறுபடியும் இம்மடலூடாக சந்திப்பதில் இயேசு கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியடைகின்றோம்.

**இவ் ஆண்டின் கடந்து சென்ற இரண்டு மாதங்களும் கர்த்தரின் கரம் எம்மைத் தாங்கி ஆசீர்வதித்து வந்திருக்கின்றது. இனியும் அவர் நடத்துவார். ஒரு வேளை உங்கள் வாழ்வில் துன்பத்தைத்தான் தொடர்ந்து சந்திக்கின்றீர்களா? அப்படியானாலும் நீங்கள் கலங்க வேண்டாம். ஏனெனில் ஒரு வேளை கர்த்தர் உங்களை புடமிடும் நாட்களாக இருக்கலாம். ஆகவே பொறுமையுடன் அவர் நடத்தும் பாதையில் நடந்து செல்லுங்கள்.**

பக்தன் யோபு சொன்னான்: **"நான் சோதிக்கப்பட்ட பின் பொன்னாக விளங்குவேன்"** என்றான். உங்களுக்கு ஏற்படும் எல்லா துன்பங்களையும் மகிழ்ச்சியுடன் சந்தியுங்கள். ஸ்பேர்ஜன் என்ற பிரசங்கியார் சொல்லுகிறார்: **"துன்பத்தின் பாதையே பரலோகத்துக்கான வழியாய் இருக்கிறது. இந்தப் பாதையில் தாகம் தீர்க்கும் கிணறுகள் உண்டு"**

எனவே பிரியமானவர்களே, வரும் நாட்களில் ஆண்டவரில் பெலப்பட்டு, அவருக்காய் எல்லாவற்றையும் சகித்து அவருடைய சாயலை பிரதிபலித்து உண்மையுள்ள தேவனுடைய பிள்ளைகளாய் வாழுங்கள்.

**ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்.**

– ஆசிரியர் –

# மூன்று காரியங்கள்

நமது வாழ்க்கையில் ஒரு முறை போனால் திரும்ப பெற முடியாத மூன்று காரியங்கள்

1. காலம்
2. வார்த்தைகள்
3. சந்தர்ப்பங்கள்



நமது வாழ்க்கையில் நிலைத்திராத மூன்று:

1. அதிர்ஷ்டம்
2. வெற்றி
3. கனவுகள்

ஒரு மனிதனை அழிக்கும் மூன்று காரிங்கள்

1. கோபம்
2. பெருமை
3. மன்னியாதிருத்தல்



ஒரு மனிதனை உருவாக்கும் மூன்று காரிங்கள்

1. கடமை
2. உண்மை
3. கடின உழைப்பு

இழக்கக்கூடாத மூன்று காரியங்கள்

1. நம்பிக்கை
2. சமாதானம்
3. நேர்மை



நம் வாழ்க்கையில் என்றும் நிலைத்திருப்பவர்

1. பிதா
2. குமாரன்
3. பரிசுத்த ஆவி

மிகவும் அருமையான மூன்று காரியங்கள்

1. அன்பு
2. குடும்பமும் நண்பர்களும்
3. தயவு



இவைகளில் எதை விட வேண்டுமோ அதைவிட்டு எதைப் பெற வேண்டுமோ அதைப் பெற்று உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க ஆசிக்கிறேன். **தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக.**




# நல்ல தெரிவு!!

ஒரு முறை ஒரு குறிப்பிட்ட பாடசாலை ஒன்றிலே வழமை போலவே கற்றல் நடவடிக்கைகள் நடை பெற்றுக் கொண்டிருந்தன. அங்கே ஒரு வகுப்பிலே நடைபெற்ற நிகழ்வு தான் இது.



மாணவர்களின் முகங்களில் எல்லாம் ஒருவித மகிழ்ச் சியும் பூரிப்பும் நிறைந்திருந்தது. ஏனெனில் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஆசிரியரின் பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாடத்தை மட்டும் அல்லாது வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் மாணவர்களுக்கு ஏற்ற வகையிலே அன்பாக போதிப்பதில் வல்லவர் அந்த ஆசிரியர். எனவே மாணவர்களுக்கு எல்லாம் அவர் மேல் அலாதி பிரியம்.

இவ்வாறாக அங்கிருந்த எல்லா மாணவர்களினதும் கவனத்தையும் ஈர்த்தவராக அந்த ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென அவர் மாணவர்களைப்பார்த்து **"உங்கள் எல்லாரிடமும் நான் ஒரு கேள்வி கேட்கப்போகிறேன், உங்கள் மனதில் ஏற்படும் கருத்தை கூறவேண்டும்"** என்றார். மாணவர்களும் ஆர்வமாக சரி என்று தலையசைத்தனர்.



**நாளை காலை ஒரு நபர் உங்களைத் தொலை பேசியில் தொடர்பு கொள்வார். அவரை யாரென்று உங்களுக்கு தெரியாது. அவர் உங்களிடம் ஒரு விடயத்தைக் கூறுகின்றார். அதாவது அவர் தினமும் உங்கள் வங்கி கணக்கிலே ரூபா 86,400.00ஐ வைப்பில் இடப்போவதாக கூறுகின் றார். நீங்கள் திகைத்துப்போய் விடுகிறீர்கள்.**



தினமும் எனக்கு 86,400.00 ரூபாவா? ஏங்கிப் போகிறீர்கள். ஆனால் அவர் அத்துடன் நின்று விடாது ஒரு நிபந்தனையும் கூறுகின்றார். நிபந்தனை என்னவெனில் ஒவ்வொரு நாளும் இடப்படும் அந்த பணத் தொகை அன்றே செலவு செய்யப்பட வேண்டும். அது அடுத்த நாளுக் கென்று சேர்த்து வைக்கப்பட முடியாது. அப்படி மீதி வைக்கப்படும் பணம் மீளவும் அவரால் எடுத்துக்கொள்ளப்படும் என்பதாகும். ஆசிரியர் தொடர்ந்தார். ***"சரி! இந்த நிலமையில் நீங்கள் என்ன செய்வீர்கள்? அந்த முழு தொகைப் பணத்தையும் எந்த விதத்தில் செலவுசெய்வீர்கள்? ஒவ்வொரு நாளும் கிடைக்கும் அந்த பணத்தொகையை எப்படி பாவிக்கப்போகிறீர்கள் எனக்கூறுங்கள்"*** என கூறி நிறுத்தினார். பல விதங்களில் பல கோணங்களில் பதில்கள் வந்தவண்ணம் இருந்தன. **"பணம்"** என்பதால் எல்லோரும் ஏதோ விதத்தில் அதை பிரயோஜனமாக பாவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பதில் அளித்தனர். சிறிது நேரம் கடந்தது. எல்லோரும் பதில் அளித்து ஓய்ந்தனர்.

ஆசிரியர் எல்லா மாணவர்களையும் பார்த்து **"எனக்கு பிரியமான செல்வங்களே! நீங்கள் கூறிய பதில்கள் எல்லாம் நன்று. ஆனால் அதற்கு மேலாக நான் இன்னுமொரு காரியத்தை சொல்ல விரும்புகிறேன்."** அந்த குறிப்பிட்ட நபரைப் போலத்தான் எம்மை உருவாக்கிய ஆண்டவரும் தினமும் எம் கைகளிலே 86,400 செக்கன்களைத் தருகிறார். இந்த செக்கன்கள் ஒரு நாளில் இருந்து இன்னொரு நாளுக்கு கொண்டு செல்லப்பட முடியாது. இந்த நேரம் அன்றே வாழ்ந்து முடிக்க வேண்டும். எனவே நாம் அந்த செக்கன்களை எப்படி கழிக்கின்றோம்? நாம் மீண்டும் சந்திக்க முடியாத அந்த செக்கன்களை எப்படி பிரயோஜனப்படுத்திக் கொள்கிறோம்? அந்த 86,400 செக்கன் களையும் உபயோகப்படுத்தும் தெரிவு உங்களிடமே விடப்பட்டுள்ளது. பணத்தைவிட பெறுமதியான அந்த நேரத்தை நல்ல காரியங்களுக்காக செலவிடுகிறோமா? அல்லது தீமைக்காகவே பயன்படுத்துகின்றோமா? தேவன் எமக்கு பொக்கிஷமாக அருளும் அந்த செக்கன்களில் மற்றவர் களுக்கு உதவுவோம், அன்பை பகிர்வோம் , மகிழ்ச்சியை கொடுப்போம்! மற்றவர்களுக்கு தீங்கு நினைப்பதை மறப்போம்! மற்றவர்களை குறித்து தீமையாக பேசுவதை நிறுத்துவோம்! அப்போது நாம் முடிவிலே கனம் அடைவோம்!! செக்கன்களும் உங்கள் கைகளில், செயல்களும் உங்கள் கைகளில்!!" என்று கூறினார் அந்த அன்பான ஆசிரியர்!. **பாடசாலை மணி ஒலிக்கிறது !!!**



**கெ. இன்பரூபன்**




**த**னது நாயுடன் அவளது குடியிருப்பு பகுதியில் நடந்து கொண்டிருந்த ஏமி பெத் ஒரு இளைஞன் பக்கத்து தெருவுக்குள் ஓடுவதைக் கண்டாள். ஒரு கார் அவனைத் தொடர்ந்தது அந்த இளைஞன் ஒரு மரக்கட்டையை எடுத்து காரை நோக்கி ஓடினான். ஏமி பெத் பயத்தில் உறைந்து போனாள். அவள் ஒரு கோஷ்டி மோதலுக்குள் மாட்டிக் கொண்டதை உணர்ந்தாள்.

காரை ஓட்டிவந்த இளைஞன் காரை திடீரென பின்நோக்கி செலுத்தியதில் அவள் மேல் மோதிவிட்டான். அவள் காரின் பின் பகுதியில் விழுந்து தூக்கி எறியப்பட்டாள். அதிசயமாக அதிக காயம் ஏற்படவில்லை.

பின்னர் அவள் தனக்கு நேரிட்ட அனுபவத்தின் அர்த்தம் என்னவென்று புரிந்து கொள்ளவும் அது நன்மையானது என்று தோன்றுமாறு மாற்றிக் கொள்ளவும் முயற்சித்தாள். அவள் இந்த முடிவுக்கு வந்தாள்.

**வேதனை தரும் பயங்கரமான சம்பவங்கள்-நன்மையானவைகள் நடக்கின்றன ஆச்சரியமும் அதிசயமுமானவைகள் இவைகள் எல்லாம் நமக்கு தற்செயலாக நடக்கின்றன. ஆனாம் நம் இதயங்களை அன்போடு தாங்கிக் கொள்ளும் தேவனுக்கு இவைகள் தற்செயலானவைகள் அல்ல. பாடுகள் வரும் என்று அவர் அறிவார். ஆனால் தேவன் நல்லவர். தேவன் உலகில் நடைபெறும் எல்லா காரியங்களிற்கும் மேலானவர்.**

**நாம் சுகவீனங்களையும், விபத்துக்களையும், சோகங்களையும், சாவுகளையும் அனுப்விக்கலாம். ஆனால் அவர் உன்னைத் தனிமையாக விடமாட்டார். தேவன் அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றார்.**

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அனேகமாயிருக்கும்: கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். ஒரு நாளில் நாம் அவருடன் நிரந்தரமாக, பாதுகாப்பாக இருப்போம் என்பதில் நாம் உறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**(இயேசு) உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன். யோவான் 16:33**





ரேமா



## வினா விடை – 44



01. துக்கத்தினால் என் கண்ணும், என் ஆத்துமாவும், என் வயிறும் கூட கருகிப்போயிற்று என்றது யார்?
02. இருதயம் எதனால் சீர்படும்?
03. யாரைப்பார்த்து ஒரு ராஜா "நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன?" என்று கேட்டார்?
04. இறந்து போனவனுக்காக நெடுநாள் துக்கிக்கிற ஸ்திரியைப் போல காண்பித்த ஸ்திரி யார்?
05. நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்யும் என வாசிப்பதெங்கே?
06. பழைய ஏற்பாட்டில் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டு இருந்த புருஷனை தரிசனமாக கண்டது யார்?
07. புதிய ஏற்பாட்டில் பொற்கச்சை கட்டினதாக தரிசனத்தில் கண்டது யார்?
08. பத்மு தீவில் யோவான் இயேசுவை மகிமையாய் கண்டது போன்ற தரிசனத்தைக் கண்ட பழைய ஏற்பாட்டு பக்தன் யார்?
09. எதைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; எதை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்?
10. மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவது போல அகப்படும் மனுஷன் யார்?




# கனவுகள் ஏராளம்

**வா**லிபத்தில் எழுகின்ற ஆசைகளுக்கும், கனவுகளுக்கும் அளவே கிடையாது. அவை ஏராளம்: அலையலையாய் புறப்பட்டு வரும் பருவம். உன் வாழ்விலும் நீ பல கனவுகளைக் கண்டு கொண்டு இருக்கலாம்.

ஒரு வேளை நீ காண்கிற கனவு உன்னையே ஆச்சரியத்திற்கு உள்ளாக்குவதாக இருக்கலாம். நீ சோர்ந்து போகவும், சில வேளை உற்சாகமடையவும் அது ஏதுவாக அமையலாம்.

உனக்குள் எழுகின்ற விருப்பங்களின் அடிப்படையில் மனக் கோட்டைகளை கட்டிக் கொண்டு இருக்கலாம். உன் நிலை உனக்கே நன்கு தெரியும். நீ எவ்வளவு பெலனுள்ளவன், பெலனுள்ளவள் என்று. எப்போது பார்த்தாலும் இந்தக் காரியத்தை என்னால் செய்ய முடியவில்லையே என்று உன்னை நொந்து கொண்டு இருக்கலாம்.

பொதுவாக வாலிபத்தில் எழுகின்ற ஓர் பெரிய ஆசை எதிர் காலத்தில் இப்படி, இப்படியாக நான் இருக்க வேண்டும். என் செயற்பாடுகள் இவ்வாறு அமைய வேண்டுமென பல காரியங்களைக் குறித்தும் பாரிய அளவில் பரிசீலனை செய்யும் பருவம். **எத்தனை எத்தனை முயற்சிகளையும் பிரயாசங்களையும் இதுவரையில் நீ கையாண்டு இருக்கின்றாய். ஆனால் ஓர் அமைதியும், உண்மையான சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்ளாமல் உன் வாலிபத்திலே அங்கலாய்க்கிறாய்.**




## கல்வியைக் குறித்து

நீ ஒரு நிலையில் இப்போது கல்வி கற்கும் காலத்திற்கூடாக கடந்து வந்து கொண்டு இருக்கலாம். எனவே நீ உனது முழு விருப்பத்துடனும், **இந்த நாட்களில் ஊக்கமாக படிப்பதற்கு உன்னை தயார்ப்படுத்தி உன் இயேசுவுக்கு மகிமையாக கல்வி வாழ்வில் வெற்றி பெறவேண்டும்.** உனக்கு வேண்டிய சரீர



ஆரோக்கியத்தையும், ஞானத்தையும் தேவனாகிய கர்த்தரிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். **யாக்கோபு 1:5 உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயி ருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிற வரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும்.** வகுப்புக்கள் உயரும் போது: எந்தப் பாடத்தை தெரிவு செய்வது என்பதும், உன் பெலத்தை அறிந்து தெரிவு செய்து சிறப்பாக நீ செயற்படு: அப்போது உனக்குரிய இலக்கை சரியான வழியில் அடையமுடியும். ஜெபத்திலே தரித்திருந்தும் வேதத்தை வாசித்து தியானித்தும் முடிவுகளை எடுக்கப்பழகிக் கொள்.



## தொழிலைக் குறித்து

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டும். கூடவே அதன் மூலம் அவர்களுக்கு ஊதியமும் கிடைக்கப் பெறுவது யாவரும் அறிந்த உண்மையாகும். தன்னையும், தன்குடும்பத்தையும், தனக்கு வேண்டியபொருட்களையும்காப்பதற்கும், வேண்டுவதற்கும் தொழில் அவசியமாகும். ஒரு வேளை நீ ஒரு தொழிலை செய்து கொண்டு இருக்க லாம் அல்லது தேடிக் கொண்டு இருக் கலாம். அல்லது இன்னும் உயர்ந்த சம்பளத்தோடு தொழிலைத் தேடலாம். **அது எதுவானா லும் ஒன்றை உன் சிந்தையிலே பதித்து வைத்துக்கொள். நான் செய்யும் இந்தத் தொழில் என் இயேசு வுக்கு மகிமையைச் செலுத்துகின்றதா? மற்றவர்களின் ஆரோக்கியத்திற்கு ஏதுவா னதா? என்று சிந்தித்து செய்துபார்.**



## பணத்தைக் குறித்து

பணஆசை ஒருவரை பிடிக்கும் போது அதை அவரால் கண்டு கொள்வது அரிதாக இருக்கும். பல இலட்சம் ரூபாய்களை கையாள் வது தவறு அல்ல. அதை நம்பகமான முறையில் செயற்படுத்த வேண்டும். ஆனால் பண ஆசை மெல்ல மெல்ல முளைக்கும் போது அதற்கு நாம் விலகி ஓடவேண்டியது அவசியம். **பணஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது - 1தீமோத்தேயு 6:10.**

உஷாரடைய வேண்டிய விஷயம் இது. சறுக்கி சறுக்கி கடைசியில் நீ எழும்ப முடியாதபடி அது உன்னை கவ்விப் பிடித்துக் கொள்ளும் வலிமை உடையது. எச்சரிப்பாயிரு. **இன்று கூட உன் வாழ்விலுள்ள இக்கட்டான நிலைக்கும் பரிசுத்த குலைச்சலுக்கும் அடிப்படை காரணம் இதுவாக இருக்கலாம். விலகி "ஓடு".**



## திருமணத்தைக் குறித்து

வாலிபத்தின் உச்சியில் எழும் பெரிய ஒரு கேள்வியும்: கூடவே ஆசையும் இதுவாகும். **கிறிஸ்துவை அறிந்த நாளில் இருந்து நீ கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் [ஓர் உறுப்பு] என்பதனை மறந்து போகாதே.** எங்கே போனாலும், எதைச் செய்தாலும் அது அவதானிக்கப்பட்டு நிதானிக்கப்படுகிறது என்பதனை மறவாதே.

**தம்பி! தங்கையரே!,**

நீ விரும்புபவரையும், அல்லது உன்னை விரும்புபவரையும் மணப்பது எதிர்காலத்தில் ஈடாட்டத்தைக் கொண்டு வரும். **ஆரோக்கியமானதும், தேவன் விரும்புவதும் யாதெனில், அவர் உனக்கென வைத்திருக்கும் ஏற்ற துணையை ஏற்றுக்கொள்வதே ஆகும**. உன் மீது அவர் ரொம்பவும் கரிசனையாய் இருக்கின்றார். அவரின் கரத்தில் அடங்கி அர்ப்பணித்து ஜீவனும்பண்ணு. உன் நல் வாழ்க்கையின் நிமித்தம் தேவநாமம் மட்டும் மகிமையடைவதாக. ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ இரட் சிப்பது உன்னுடைய என்னுடைய வேலையல்ல. அது தேவனுடைய இலவசமான கிருபையின் ஈவு. அதை அவரே செய்கின்றார்.

அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படா திருப்பீர்களா!

**அவிசுவாசி:-** பரிசுத்த வேதாகமம் ஒரு மனிதன் எப்பேற்பட்ட விசுவாசமுள்ளவனாக இருக்க வேண்டும் என்றும்: அதிலே தான் தேவனும் பிரியமாயிருக்கிறார் என்றும் கூறி அறிவிக்கிறதோ அதற்கு மாறான எந்த காரியமும் அவிசுவாசமாகும்.

தேவபிள்ளைகள் என்று தங்களை சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்கும் மெய்யான விசுவாசத்திற்கு விரோதமான கேள்விகளோடும், தம் மன எண்ண கோட்பாடுகளோடும் தர்க்கம் பண்ணுகிறவர்களும், அவிசுவாசிகளே. மிகவும் விழிப்பாயிரு. நல் விசுவாசமும் உன் திருமண வாழ்வின் மூலம் சீர் பொருந்துவதாக.

**இறுதியாக:-** உனக்காக மரித்து உயிர்த்த அந்த தெய்வமாம் இயேசு கிறிஸ்துவுக்காகவும் அவரின் விருப்பத்தையும் தாகத்தையும் தீர்க்க மாத்திரம் உன்னை அவர் கரத்தில் ஒப்படைப்பாயாக. எல்லாம் இயேசுவுக்கே...



அன்பரின் அறுவடையில்.
போதகர் வேதநாயகம் சுமணன்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 41
## சரியான பதில் எழுதியவர்கள்

01. தி. ஜெகா – மயிலங்காடு
02. ஆ.மயூரதி – மீசாலை
03. ச.சனோஜா – மீசாலை
04. ச.யோகேஸ்வரி – மீசாலை
05. சுயந்தன் – புங்குடுதீவு
06. சி.பியூலா – மானிப்பாய்
07. ம.றீகா – ஊர்காவற்றுறை
08. து.கிரிசாந்த் – ஊர்காவற்றுறை
09. து.கிருஸ்ணகுமார் – ஊர்காவற்றுறை
10. ந.யோசுவா – ஊர்காவற்றுறை




# யாரால் முடியும்?




ஒரு சமயம் ஒரு மனிதன் ஒரு மருத்துவரிடம் போய் தனக்கு மனச்சோர்வு அதிகமாயிருப்பதாகவும், அதனால் தன் கடமையைச் சரியாய்ச் செய்ய முடியவில்லை என்றும் அதற்கு நல்ல மருந்து தேவை என்றும் கேட்டான். மருத்துவர் அவனை நன்றாய் சோதித்துப் பார்த்தபின் அவன் தேகநிலை சரியாயிருப்பதாகவும், கவலையில்லாமலிருக்க அவன் நல்ல கதைப்புத்தகங்களை வாசித்தால் பலனுண்டு என்றும் கூறினார். அதற்கு அம் மனிதன் அது தன்னால் இயலாது என்று தலையை அசைத்தான்.

அப்பொழுது அந்த மருத்துவர் அப்படியென்றால் ஒரு சினிமா கொட்டகையைக் குறிப்பிட்டு அக்கொட்டகையில் ஒரு நகைச்சுவைப் படம் ஓடிக்கொண்டிருக்கிறது: அதைப் பார்த்தாயானால் உன் மனதிற்கு சந்தோஷம் ஏற்படும்: நாளடைவில் உன் நிலை சரியாகிவிடும் என்றார்: அதுவும் சம்மதமில்லை என்று அம் மனிதன் தலையை அசைத்துவிட்டான்.



**திரும்ப அம் மருத்துவர் கொஞ்சம் ஆலோசனைக்குப் பின் இந் நகருக்கு ஒரு புது சர்க்கஸ் வந்திருக்கிறது: அதில் வரும் கோமாளி யாவரையும் சிரிப்புக்காட்டி சந்தோஷப்படுத்துகிறானாம்: நீ அங்கு போய் சில மணி நேரங்களைச் செலவு செய்தாயென்றால் உன் மனச்சோர்வு நீங்கும் என்றாராம். அதற்கு அம் மனிதன்: ஐயா, அந்தக் கோமாளி நான் தான் என்றானாம்.**

தன் நடிப்பைக் காணும் யாவருடைய மனச்சோர்வையும் நீக்கக் கூடிய ஒரு மனிதனுக்குத் தன்னுடைய மனச்சோர்வை நீக்க வழி தெரியவில்லை.

**ஆனால எல்லா மனசோர்வையும் நீக்கி சந் தோஷத்தையும் சமாதானத்தையும் இவ் வுலகில் அருளக் கூடியவர் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே என் பதை உணருகிறோமா?**



**இயேசு கிறிஸ்து தாம் பூமியில் உலாவிய போது "வருத்**

தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்! நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்: என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்றார். (மத்தேயு 11:28, 29) பின்னும் இயேசு கிறிஸ்து: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன்: என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்: உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27) என்று கூறிச் சென்றிருக்கிறார்.

இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணிய சமாதானத்தை யும் மனசந்தோஷத்தையும் பெற்றவர்களாக இருக்கிறோமா? இல்லாவிட்டால் அவரிடத்திற்குப் போவோம: அவர் இளைப்பாறுதல் தருவார்.

## வாசகர்கள் கவனத்திற்கு!

அன்பான வாசகர்களே! நீங்கள் கடிதம் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளும் போது உங்களுடைய விலாசத்தையும் தயவு செய்து அறியப்படுத்தவும்.

மேலும், வினாவிடை பகுதிக்கான விடைகளை நீங்கள் எழுதும் போது விடையின் வேதாகமப் பகுதியை மாத்திரம் குறிப்பிடாமல் அதற்குரிய சரியான விடைகளையும் எழுதி அனுப்பவும். அத்தோடு அனலைக் குறித்த உங்களுடைய அபிப்பிராயங்களையும் தயவு செய்து எங்களுக்கு அறியத்தாருங்கள்.

– ஆசிரியர் –



# பக்தர்களின் பயிலகம்

## புளித்தமா

## I) பழைய புளித்த மா – 1கொரிந்தியர் 5:7

***பழைய வாழ்க்கையின் புளித்த மாவை (பாவத்தை) புதிய வாழ்க்கைக்குள் இழுத்து வரவேண்டாம்.*** ஆபிரகாம் இப்படி செய்தான். ***இரண்டு தடவை தன் மனைவியை சகோதரி என்று சொல்லச் சொன்னான்.*** நீ என் மனைவி என்று சொன்னால் கொன்று போடுவார்கள் என்றான்.

***ஆபிரகாம் தன் புதிய வாழ்க்கைக்குள் பழைய புளித்தமாவை இழுத்து வந்தான்.*** அது அவனை பிரச்சினைக்கு உள்ளாக்கியது. ***1கொரிந்தியர் 5ம் அதிகாரத்தில் பவுல் சொல்வது என்னவென்றால்:*** அம் மனிதன் பாவத்தில் வாழ்வதே பழைய புளித்த மாவின் தன்மை தான் என்பதேயாகும்.

***1கொரிந்தியர் 5:2-6*** இன்று சபை பாவத்தை விட்டுவிடாவிட்டால் அது வளர்ந்து மற்ற மனிதரையும் தொற்றும். ***எனவே சபை ஒழுக்கம் என்பது ஒரு பொலிஸ் குற்றவாளியைப் பிடித்து சிறைக் கூண்டுக்குள் தள்ளுவது அல்ல.*** சபை ஒழுக்கமானது இருதயம் நொருங்கிய போதகர் (மேய்ப்பன்) வழி தவறிச் சென்ற ஆட்டை கண்ணீரோடும் ஜெபத்தோடும் தேடிக் கண்டு பிடித்து புதுப்பித்தலாகும்.

## II) துர்க்குணம் பொல்லாப்பு எனும் புளித்த மா – 1கொரிந்தியர் 5:8

துர்க்குணம் பொல்லாப்பு புளித்த மாவுக்கு ஒப்பாக இருக்கின்றது. ***துர்க்குணம் என்பது இன்னொருவரைப் பற்றி உங்கள் இருதயங்களில் தவறான எண்ணம் கொண்டவர்களாய் இருப்பதாகும்.*** உங்கள் எதிரிக்கு ஏதாவது காரியசித்தி கிடைத்தவுடன் எரிச்சலுண்டாகும். ***எதிரிக்கு பிரச்சனை என்றால் சந்தோஷம் உண்டாகும்.***

துர்க்குணம் என்பது மற்றவர்களோடு ஒன்றிணைந்து போவதை தடுக்கும் இருதயத்தின் ஆழத்தில் இருக்கும் கொடூரமான நஞ்சாகும். ***அது புளித்த மாவைப் போல் பரவி முழுக்குடும்பத்திலும் சபையிலும் தொற்றும்.***

1பேதுரு 2:2 துர்க்குணத்தை ஒழித்து விடும்படி கூறுகின்றது. ***இதனால் குடும்பம் சபை பிளவுபடுகிறது.*** எனவே இதை அகற்றுவோம்.

## III) மாயமாகிய பரிசேயருடைய புளித்தமா – லூக்கா 12:1

மாய்மாலம் என்பது வேண்டுமென்று பாசாங்கு செய்வதாகும். ***ஒரு குறிப்பிட்ட தரத்தை அடையாது குறைந்து காணப்படுவது மாய்மாலம் அல்ல.*** நாம் அடையாது இருக்கும் தரத்தை, நிலையை இலட்சியத்தை அடைந்துவிட்டோம் என பாசாங்கு செய்வது தான் மாய்மாலம். ***மாய்மாலத்தை குறித்த தெளிவான கண்டுபிடிப்பு மத்தேயு 23ஆம் அதிகாரத்தில் உள்ளது.*** இயேசு இந்தப் பரிசேயரைப் பிடித்தார்.

***மத்தேயு 23:27 பரிசேயரே உங்களுக்கு ஐயோ! வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்பதும் கூட மாய்மாலத்தையே காண்பிக்கின்றது.*** 1வது ஜெப வாழ்க்கையை குறித்து பாசாங்கு செய்வோம். ***2வது கொடுப்பதைக் குறித்து பாசாங்கு செய்வோம். 3வது சாட்சியைக் குறித்து பாசாங்கு செய்வோம்.*** புளித்த மாவைப் போல் மாய்மாலம் வளரும். ***மாய்மாலம் ஓர் பயங்கரப்பாவம்.*** ஏனெனில் உண்மையையும், கபடத்தையும் மாய்மாலம் மறைக்கின்றது. உண்மைக்கும் சத்தியத்திற்கும் புறம்பாக வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழமுடியாது. எனவே மாய்மாலம் எனும் புளித்த மாவையும் தள்ளிவிடுவோம்.

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)**

தொடரும்......

**பாவத்தை ஆரம்பத்திலேயே விட்டுவிட வேண்டும்: அப்படி விடாவிட்டால் இறுதியில் நாம் விட்டுவிட ஆசைப்பட்டாலும் அது நம்மை விடாது**

# அருட்பணியாளர் சரிதை

## டாக்டர். விகோ ஒல்சன்

தொடர்ச்சி...

தனது வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து நித்திய வாழ்க்கைக்கான வழியை விளக்கிக் கூறிய விகோவுக்கு மற்றவர்கள் முன்னிலையில் நன்றி கூறினார்.

## அருட்பணி போராட்டம்

விகோ ஒல்சனின் மிஷன் போர்ட் குறித்தான தெரிவு அவ்வளவு எளிதாக வரவில்லை. அவர்கள் பப்டிஸ்ட்டாக (Babtist) இருந்தமையால், உலக சுவிசேஷத்திற்கான பப்டிஸ்ட்ஸ் சங்கம் அவர்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டது. இச் சங்கத்தினால் அவர்களுக்கு கிழக்கு பாகிஸ்தானுக்கு சென்று மருத்துவ அருட்பணியை தொடர்வதற்கு வழி திறக்கப்பட்டது.

விகோவை போன்ற வாஞ்சையுடைய சி.விக்டர் பர்னாட் என்ற மிஷனெரியும் விகோவை சந்தித்து அதைக் குறித்து அவரை ஊக்கப்படுத்தினார். அவர்கள் கலந்துரையாடிய போது இருவரினதும் கருத்துக்கள் வேறுபட்டதாயிருந்தது. விகோ ஒரு சிறிய மருத்துவமனையொன்றை நிறுவ திட்டமிட்டிருந்தார். ஆனால் பர்னாட்டின் திட்டமோ கிரமாங்கள் தோறும் சென்று நோயாளிகளைச் சந்தித்து குணமாக்குவதாக இருந்தது. அவர்கள் திட்டங்கள் வேறுபட்டதாயிருந்தாலும், விகோ அவ் சமர்ப்பணமான அருட்பணியாளரை பாராட்டினார். டாக்டர் விகோவுக்கு கிழக்கு பாகிஸ்தானை (பங்களாதேஷ்) தனது நினைவிலிருந்து அழிக்க முடியவில்லை. கிழக்கு பாகிஸ்தான் ஆனது கிறிஸ்தவ சபையினால் மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தது. எந்தவொரு கிறிஸ்தவனோ, கிறிஸ்தவ ஊழியமோ நாட்டின் கீழ் தெற்கு பகுதியில் பிரசித்தம் ஆகவில்லை.

## கிழக்கு பாகிஸ்தானை நோக்கி விகோ ஒல்சனின் பயணத்திற்கு சம்மதம் கிடைத்தல்

1959ம் ஆண்டில் உலக சுவிசேஷத்திற்கான பப்டிஸ்ட்ஸ் சங்கத்தின் தலைவர், விகோவுக்கு மருத்துவ அருட்பணி தொடர்பான திட்டங்களை, கோட்பாடுகளை முன்வைக்குமாறு ஒரு கடிதம் அனுப்பினார். டாக்டர் விகோ ஒல்சன் 13அடிப்படை கோட்பாடுகளை முன்வைத்தார். சங்க உறுப்பினர்கள் அவருடைய கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாவிடின் வேறொரு சங்கத்திற்கு செல்ல எண்ணியிருந்தார்.

நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர் சங்க உறுப்பினர்கள் விகோவின் கிழக்கு பாகிஸ்தான் குறித்ததான மருத்துவ அருட்பணி திட்டங்களுக்கு சம்மதம் தெரிவித்தனர்.

## கிழக்கு பாகிஸ்தானில் விகோவின் அருட்பணி ஆரம்பம்.

1962ம் ஆண்டு ஜனவரி மாதம் விகோவும் அவருடைய குடும்பத்தினரும் கிழக்கு பாகிஸ்தானை நோக்கி பயணித்தனர். அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தவுடனே விகோ தான் கட்டவிருக்கின்ற மருத்துவமனை குறித்த காரியங்களை திட்டமிட ஆரம்பித்தார். ஒரு மிஷனெரியாக அந் நாட்டுக்குள் பிரவேசிப்பது எளிதாக இருந்த போதும், அந் நாட்டின் அரசாங்கமானது திறமையற்றதாக இருந்ததாலும், அங்கு அநேக சட்டதிட்டங்கள் இருந்தமையாலும், மருத்துவ அருட்பணியை ஆரம்பிப்பது கடினமாக இருந்தது. கிழக்கு பாகிஸ்தானுக்கும் மேற்கு பாகிஸ்தானுக்கும் 1000மைல் தூரம் இருந்தாலும் அவைகளுக்கிடையே ஒரு பொதுவான எல்லை இல்லாததால் அரசாங்க, பொருளாதார, சமூக பிரச்சினைகள் பல காணப்பட்டன. ஆனால் விகோவோ மிகவும் பொறுமையாக இருந்து மருத்துவமனையை கட்டுவதற்கு தேவையான இடத்தை அரசாங்க அனுமதியுடன் பெற்றுக் கொண்டார்.

1965ம் ஆண்டில் விகோ எல்லாப்பக்கத்தாலும் தாக்கப்பட்டார். விசா தடை, கோத்திர வேலை, தொழிலாளர் பிரச்சினை, இயற்கை அனர்த்தம், போர், நோய், மரணம் போன்றவை. மீண்டும் மீண்டும் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிப்பதற்காகவும், எதிராக செயற்படுவதற்காகவும் விகோ, 25 ஆலோசனைச் சங்க கூட்டங்களைக் கூட்டினார்.

## நெருக்கடி ஆரம்பம்

மாதங்கள் பல கழிந்தன, கிழக்கு பாகிஸ்தானின் நிலைமை மேலும் மோசமாகியது. இந்திய இராணுவம் மேற்கு பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து பாகிஸ்தானுடன் போர் புரிந்தது. 17நாட்கள் கடுமையான போரின் பின்னர் பல பெண் மிஷனெரிகளும், பிள்ளைகளும் நாட்டில் வழமையான நிலைமை உருவாகும் வரை தங்கள் சொந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 1966ம் ஆண்டு கிறிஸ்தவ நினைவு மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. மருத்துவ வேலையானது அவசர சிகிச்சைகளுக்கு முகங்கொடுக்கிற அளவுக்கு மிகவும் பாரிய அளவில் ஆரம்பமானது. பெருமளவில் பரவிய வாந்திபேதி நோய் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. 100ற்கு மேற்பட்ட நோயாளிகள் இம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

## நெருக்கடி மத்தியில்

டாக்டர் விகோவின் அருட்பணி மருத்துவத்திற்கும் அப்பாற்பட்டாயிருந்து. அவர் அருட்பணியில் ஈடுபாட்டுடன் செயற்பட்டார். அவர் புதிய பெங்காளி கிறிஸ்தவர்களுக்கு திருமுழுக்கு பற்றின வகுப்பொன்றை நடத்தினார். இதன் பயனாக 17பேருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. இது அவ்விடத்தில் நடைபெற்ற மிகப்பெரிய திருமுழுக்கு ஆராதனையாகும்.

1971ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23 இரவு நேரத்தில் விகோவும் அவருடைய வேலையாட்களும் ஒரு பயங்கரமான அனுபத்திற்குட்பட்டார்கள். அன்றிரவு மருத்துவ வளாகத்தை இராணுவத்தினர் வந்து தாக்கப்போவதாக செய்தி வந்தது. அப்பொழுது விகோவும் குழுவினரும் இராணுவத்திற்கு பயந்து தப்பிப்போக நேர்ந்தால் பாடுகளின் மத்தியில் கட்டிய மருத்துவமனையை விட்டுவிட்டே செல்ல வேண்டும். அதனால் வேறொரு வழியும் அற்ற நிலையில் அவர்கள் தங்கள் உயிரை தாங்கள் அழைப்பெற்ற மிஷன் ஊழியத்திற்காக பணையம் வைக்க தீர்மானித்தனர். ஏற்கனவே விகோ, துவிச்சக்கரவண்டியுடனான விபத்தில் முழங்கையில் உபாதைக்குள்ளானதால் நிலைமை இன்னும் மோசமாகியது. விகோவும் குழுவும் அங்கேயே தங்கிவிட்டனர். மற்றும் அரசாங்கத்தால் ஒவ்வொரு நாள் இரவும் மின்சாரம் துண்டிக்கப்படும். இதனால் மருத்துவ கட்டடமும், வளாகமும் கள்வர்கள் எல்லாப் பக்கத்தினாலும் நுழைவதற்கு எளிதான விதத்தில் இருண்ட அடர்த்தியான காடு போன்று காரிருளினால் சூழப்பட்டிருக்கும். ஆனால் எவராலும் விளக்கிக்கூற முடியாத விதத்தில் மிகவும் அதிசயமாக அன்று எவ்வித தாக்குதலோ, மின்சாரத் தடையோ ஏற்படவில்லை. மகிழ்ச்சியுற்ற பெங்காளி ஒருவன் இது அல்லாஹ்வின் செயல் என கூச்சலிட்டான். ஆனால் விகோவும் அவர் குழுவும் இது தேவனுடைய கரத்தின் வல்ல செயல் என அறிந்திருந்தனர்.

## பங்களாதேஷ் எனும் புதிய தேசம்

டாக்டர் விகோ சிறிது ஓய்வெடுக்கும் முகமாக ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்றார். அவர் அங்கு சென்ற பின், புதிய சுதந்திர பங்களாதேசம் உருவாகியது. ஆயினும் தேசத்து பிரச்சினைகளும் குழப்பங்களும் முடிவுக்கு வரவில்லை. விகோ, திரும்பவும் பங்களாதேசத்திற்கு வந்தார். எவ்வளவோ பாடுகள், வேதனைகள் மத்தியில் விகோ கனிதருகிறவராய் கிறிஸ்தவ மருத்துவ அருட்பணிக்கும் தேவனுக்கும் பிரகாசிக்கிற ஒரு சாட்சியாக திகழ்ந்தார்.

டாக்டர் விகோ ஒல்சன் ஒரு மருத்துவ அருட்பணியாளராக பங்களா தேஷிற்கு சென்று 33வருடங்கள் அங்கு சேவை செய்ததன் மூலமும் தேவனுக்காக பெரிய காரிங்களைச் செய்தார். அவர் ஆலோசனை சங்க தலைவரானார். அத்தோடு அவர் கிறிஸ்தவ நினைவு மருத்துவ மனையின் ஸ்தாபகர், பிரதான மருத்துவ அதிகாரி, நிர்வாகக்குழுத் தலைவரானார். மற்றும் கோத்திரங்களின் ஊழியங்களின், சுவிசேஷ ஊழியங்களின் இயக்குனராக கடமையாற்றினார். அவர் பல விஞ்ஞான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அவருக்கு செடர்விலே பல்கலைக்கழகத்தினால் மனிதநேய கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. அவர் ஷக்மா கோத்திர இளவரசரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். இவ் இளவரசர் புதிய ஏற்பாட்டை ஷக்மா மொழிக்கு மொழிபெயர்த்ததோடு ஒரு ஆலயத்தையும் நிறுவினார். அவர் முதலாவது மர்மா கோத்திர ஆலயத்தை நிறுவினார். **இவைகள் தேவனுக்காய் செய்த பணியின் நிறைவல்ல.. தொடர்பே ஆகும்..**

**முற்றும்.**

# மூவரி

தேவனின்
சபையே
அடிமைகளின் சுதந்தரம்

காலங்களின் கருவறையில்
கர்த்தரின் அன்பு
நிலையானது

காலங்களின் முடிவை
அறிவிக்கும்
கடிகாரம்

கடைசிக்காலங்களின்
சத்தங்களில்
முக்கியமானவைவேதமே

இராஜாவின் வருகையில்
சிறந்த சத்தம்
பரிசுத்தம்

தேவராஜ்ஜியம்வருவதற்கு
தேவஜனங்களின்
தேவை! தேவை

உணர்வடையும்
மனங்களின்
இருப்பிடம் சபை

சத்தியம் கடந்து
போக தேவை
அருட்பணி

உத்தமத்தைத்
தேடும் இடம்
உலகம்

அருட்பணியின்
அறைகூவல்
அழியும் ஜனமே



# அனலின் அன்பின் செய்தி

# தேவன் எம்மிடம் எதிர்பார்க்கும் அன்பு

## *The Love which God Expects*

ஒரு இளவரசனையும் ஏழையையும் குறித்து சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஒரு இளவரசன் எவ்வாறு இந்தப் பரமஏழை மீது அன்பு கூர்ந்தான் என்பதனையும், அவர்களுக்கு இடையே ஏற்பட்ட குணஇயல்புகளை பரிசுத்த வேதாகமத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற பிரகாரம் நாங்கள் பார்க்கப் போகின்றோம். இளவரசன் என்று குறிப்பிடப்படுபவன் பெரிய பதவியில் இருக்கின்றான். அவன் ஒரு ராஜாவினுடைய மகன். உயர்ந்த ஸ்தானம், அந்த தேசத்திலே அடுத்ததாக ஆளுகை செய்யப்போகின்றவன். இப்படிப்பட்ட அதிகாரத்தை உடைய ஒரு நபர் ஒன்றுமே அறியாத பரம ஏழை. ஒன்றுக்கும் எண்ணப்படாதவன், உதவாதவன், வேண்டப்படாத ஒருவனை சிநேகிப்பதை 1சாமுவேல் 18ம் அதிகாரத்திலிருந்து 23ஆம் அதிகாரம் வரையிலான பகுதியிலே நாங்கள் பார்க்கலாம்.

இந்த இளவரசன் யாரெனில்: அவன் தான் யோனத்தான். இவன் சவுலினுடைய மகன். அடுத்ததாக ராஜ்யபாரத்தைப் பெறவேண்டிய ஒருவன். இஸ்ரவேலின் முடிக்குரிய இளவரசனாய் இருக்கின்றான். இந்த யோனத்தான் பரம ஏழையும் வேண்டப்படாதவனும் ஒன்றுக்கும் உதவாதவனும் எண்ணப்படமுடியாதவனுமாகிய ஏழையாகிய தாவீதின் மேல் அன்பு கூருகின்றான். இவர்கள் இருவரும் ஒரு உண்மையான நட்புறவுக்குள்ளே வருகிறதை நாங்கள் பார்க்கலாம்.

**உண்மையான நண்பன் யார்? என்ற கேள்விக்கு ஒருவர் சொன்ன கருத்து: இந்த உலகமே உன்னைவிட்டு தூரப்போகின்ற போது உன்னை நோக்கி வருகின்ற முதலாவது நபர் உன்னுடைய உண்மையான நண்பன். (A true friend – The first person who comes in when the whole world has gone out)** வேண்டப்படாத ஏழையாகிய தாவீதின் மீது இளவரசனாகிய யோனத்தான்காட்டிய அன்பை குறித்து அவதானிப்போம்.

## ✱ யோனத்தான் தாவீதின் மீது அன்பு கூர்ந்தான்.

உள்ளான ரீதியிலும், வெளியான ரீதியிலும் ஒரு முற்றுமான அன்பு யோனத்தானுக்கு தாவீதின் மீது இருந்தததை நாங்கள் தெளிவாக பார்க்ககூடியதாக இருக்கின்றது. இந்த யோனத்தானுக்கும் தாவீதுக்கும் இடையேயான அன்பு நான்கு விதங்களில் காணப்பட்டது. அதனைக் குறித்து சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

### 01. சிக்கலற்ற அன்பு
### Uncomplicated Love

1சாமுவேல் 18:1-5 **1சாமுவேல் 18:1 அவன் சவுலோடே பேசி முடிந்த பின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது: யோனத்தான் அவனைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான்.** இந்த சம்பவத்திலே நாங்கள் பார்க்கின்ற காரியம் யோனத்தான் தாவீதின் மேல் வைத்த அன்பு சிக்கலற்ற அன்பாக இருந்தது. இந்த வசனம் எப்படி ஆரம்பிக்கின்றது என்று பார்த்தால் அவன் சவுலோடே பேசி முடிந்த பின்பு, ...... இந்த வசனத்தை நாங்கள் பார்ப்போமாக இருந்தால் தாவீது யோனத்தானோடு பேசவில்லை சவுலோடு பேசுகின்றான். இளவரசனாகிய யோனததானுடைய தகப்பனுக்கும் பரம ஏழைக் கும் இடையில் நடை பெற்ற சம்பாசணையை வைத்து இந்த சம்பாசணையில் என்ன காரியங்களை பேசுகிறார்கள் என்று கேள்விப்பட்ட இந்த இளவரசன் என்ன செய்தான்? அந்த பரம ஏழையை உயிரைப்போலசிநேகித்தான.

ஏனெனில் தாவீது தாவீதாக இருந்தமையால்யோனத்தான் தாவீதை நேசிக்கின்றான். தாவீதுக்கும் யோனத் தானுக்கும் இடையிலே அவர்களுடைய ஆத்துமா ஒன்றாக இசைந்திருநதது என்று பரிசுத்த வேதாகமம் சொல்கின்றது. அப்படி இசைந்திருந் தார்கள் என்று சொல் லும் போது அவர்கள் இருவருக் குமிடையே **சிக்கலில்லாத அன்பு காணப்பட்டது.** இந்தக் காரியத்தைக் கிறிஸ்துவோடு நாங்கள் ஒப்பிட்டு பார்ப்போமாக இருந் தால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை இதன் மூலம் தெளிவாக எங்களுக்கு காண்பிக்கப்படுகின்றது. **கிறிஸ்து எம்மீது சிக்கலற்ற அன்பு கூர்ந்திருக்கின்றார். அவருடைய சிக்கலற்ற இந்த அன்பிற்கு நாங்கள் பாத்திரவான்கள் அல்ல.** நாங்கள் அதற்கு தகுதியுள்ளவர்கள் அல்ல. அவர் எங்களை எண்ண வேண்டிய அவசியமில்லை. நாங்கள் பரமஏழைகள் போல் இருக்கின்றோம். நாங்கள் அவருடைய பார்வைக்கு தேவையற்றவர்களைப் போல இருக்கின்றோம். ஆனால் எம் தேவன் எம் மீது சிக்கலற்ற அன்பு கூர்ந்த ஆண்டவ ராக இருக்கின்றார்.

**எபேசியர் 2:1-5 அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்**

**திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியா மையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்: கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.** இப்படிப்பட்ட எண்ணத்தோடு தேவையற்றவர்களாக ஒரு எளிமையான முறையிலே வாழ்ந்த எங்களை இயேசு சிக்கலற்ற அன்பினாலே அன்பு கூர்ந்தார். யாரும் சொல்ல முடியாது இந்த எபேசியர் 2ஆம் அதிகாரத்திலே குறிப்பிட்டபடி நான் வாழவில்லை என்பதாக. ஏனென்றால், இந்த உலகத்திலே பிறந்த அத்தனை பேரும் பாவத் தோடு பிறந்திருக்கிறார்கள் என்று சொல்லிப் பரிசுத்த வேதம் சொல்லு கின்றது.

**எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம்.** எனவே இந்த உலகத்திலே நாங்கள் பிறக்கிற பொழுது பாவத்தோடு பிறக்கின்றோம். பாவத்தோடு பிறக்கிற நாம் எங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கத்தக்கதாக ஆண்டவர் தன்னுடைய உயிரைக் கொடுத் திருக் கிறார். தன்னுடைய சிக்கலற்ற அன் பைக் கொடுத்திருக் கிறார். எனவே இப்படித் துரோகிகளாக வாழ்ந்த எங்கள் மீது அவர் சிக்கலற்ற அன்பு கூர்ந்தார். அவருடைய அன்பு முதலாவதாக எப்படிப்பட்ட என்பத னைக் குறித்து பார்க்கும் போது:

☞ **ஆண்டவருடைய அன்பு அடிப் படையான அன்பாக அல்லாவிட் டால் முதல் அன் பாக இருக்கின் றது** – His Love is Primary Love

**1யோவான் 4:10 நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. 1யோவான் 4:19 அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்திலே அன்பு கூருகிறோம்.**

☞ **அதாவது அவருடைய அன்பு நிரந்தர அன்பாக, நிலையான அன்பாக இருக் கின்றது** – His Love is Perpetual Love

**எரேமியா 31:3 பூர்வகால முதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்: ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்: ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்.**

☞ **அவருடைய அன்பு நிரூபிக் கப்பட்ட அன்பாக இருக்கின் றது** - His Love is Proven Love

**ரோமர் 5:8 நாம் பாவிக ளாயிருக்கையில் கிறிஸ்து நமக் காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.** ஆகவே ஆண்டவரா கிய இயேசுகிறிஸ்துவுடைய அன்பு அடிப்படையும் முதல் அன்பும், நிலை யான அன்பாக அத்தோடு கூட நிரூபிக் கப்பட்ட அன்பாகவும் இருக்கின்றது.

## 2. கொடுக்கும் அன்பு Giving Love

**யோனத்தான் என்ற பெயருக்குரிய அர்த்தத்தைப் பார்ப் போமாக இருந்தால் "ஜெகோவா கொடுத்திருக்கிறார் அல்லது ஜெகோ வாவின் கொடை"** இந்த யோனத் தான் தன்னுடைய பெயருக் கேற்றபடி தன்னுடைய வாழ்க்கையை தாவீதுக்கு கொடுத்திருந்தான். **யோவான் 3:16 தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவ னோ அவன் கெட்டுப் போகாமல் நித் திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத தந்தருளி, இவ் வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.** ஆங்கில வேதாகமம் மிகத் தெளிவாகச் சொல் லுகின்றது "கொடுத் தார்" For God so Loved the world, He <u>gave</u> His…. என்பதாக. ஆண்டவர் எம்மீது வைத்த அன்பின் நிமித்தமாக இயேசு கிறிஸ் துவைக் கொடுத்தார். இன்றைக்கு கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எப்படி வாழ வேண்டும்? அவருடைய பாதை யிலே வாழவேண்டும். எனவே அவர் கொடுககிறவராய் வாழ்ந்ததின் நிமித் தமாக இன்றைக்கு கிறிஸ்தவர் களாகிய நாங்களும் கொடுக்கிற வர்களாக மாறவேண்டும். **பெற்றுக் கொள்கிறவர் களாக அல்ல கொடுக்கும்படியான வாழ்க்கையை வாழும்படியாக ஆண்டவர் எங்களை அழைத்திருக் கின்றார.** ஏனென்றால் ஆண்டவர் எங்களுக்கு மாதிரியை வைத்திருக் கின்றார். கிறிஸ்தவர்களாக இருக் கின்றோம் என்பதினால் மற்றவர் களிடம் வாங்கி. வாங்கி வாழவேண் டிய அவசியமில்லை. மாறாக நாங் கள் கொடுக்கிறவர்களாக விளங்க வேண்டும்.

## 03.நிபந்தனையற்ற அன்பு Unconditional Love

**1சாமுவேல் 18:3 யோனத் தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப் போல சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்.** இங்கு பார்க்கின் றோம், நிபந்தனையற்ற, தாராளமான அன்பு. தாவீதை யோனத்தான் பகைக்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள், சம்பவங்கள் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின் றது. உதாரணமாக பார்த்தால்: சவுல் தாவீதை வெறுக்கின் றான். சவுல் தாவீதைக் கொலை செய்ய முற்படுகின்றான். 1சாமுவேல் 18:25ல் இதனைக் காணலாம்.

ஆனால் **1சாமுவேல் 19:1 தாவீதைக் கொன்று போடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத் தானோடும் தன் ஊழியக்காரர் எல்லாரோடும் பேசினான்.** சவுல் தாவீதைக் கொல்ல வேண்டும் என்று சொல்லிஇந்த இளவரசனாகிய யோனத்

றான். ஆகவே இங்கே பார்க்கின் றோம்: இளவரசனாகிய யோனத்தான் சவுலை வெறுப்பதற்கான சந்தர்ப் பங்கள் உருவாகிக் கொண்டிருக் கின்றது. இந்த சவுல் யோனத்தா னோடு ஆலோசனை பண்ணுகிற பொழுது உண்மையிலே யோனத் தானுடைய இருதயம் மாற்றபபட்டி ருக்க வேண்டும். ஆனால் யோனத் தான் தாவீதின் மேல் நிபந்தனையற்ற தாராளமான அன்பு வைத்ததினாலே எந்தக் காரியமும் அந்த அன்பை அவனை விட்டு எடுக்க முடியவில்லை. யோனத்தான் தாவீதை பகைக்கக் கூடிய எந்தக் காரியங்களும் இரண்டு பேருக்கிடையிலும் எழும்பவில்லை. ஏனெனில் இருவருக்கும் இடையில் நிபந்தனையற்ற அன்பு காணப்பட் டது. இதன் மூலம் சவுல் தன் குமாரனா கிய யோனத் தானைக் கொல்வதற்கு கூட ஈட்டியை எறிகின்றான். யோனத் தான் தாவீதை நேசித்தது இலகுவான காரியம் அல்ல தன்னுடைய ஜீவனை துச்சமென நினைத்து அவன் நிபந் தனை யற்ற அன்பு வைத்திருந் தான்.

**இயேசுகிறிஸ்து எங்களுக் காக நிபந்தனையற்ற அல்லது தாரா ளமான "அகாப்பே" அன்பி னாலே அன்பு கூர்ந்திருக்கிறார்.** இயேசு எங்கள் மேல் வைத்த அன்பை எந்தக் காரியமும் பிரிக்க முடியாது. அவர் எங்கள் மீது அன்பு கூருவதற்காக நாங்கள் ஒரு காரியமும் செய்ய வேயில்லை. நாங்கள் பாத்திரராக இருக்கவுமில்லை. ஆனால் அவர் எங்களிடத்தில் அன்பு கூர்ந்தார். அந்த அன்பு கூர்ந்த நிலையிலிருந்து எங்களை விட்டு விலகவு மாட்டார். ஏனென்றால் ஒன்றுமே இல்லாதவர் களாயும், பரதேசிகளா யும் அன்பு கூர வேண் டிய அவசியமில்லாத எங்கள் மேலாக அன்பு கூர்ந்ததினாலே <u>எங்களைத் திரும்ப அவர் கைவிட்டு போவதில்லை.</u> ஏனென்றால் அவர் நிபந்தனையற்ற தாய் எங்கள் மீது அன்பு கூர்ந்திருக் கிறார்.

**ரோமர் 8:38, 39 மரணமா னாலும், ஜீவனானாலும், தேவதூதர் களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரி யங்களானாலும், வருங்காரி யங்க ளானாலும், உயர்வானாலும், தாழ் வானாலும், வேறெந்த சிருஷ்டியா னாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டா தென்று நிச்சயித்திருக்கிறேன்.** எந்தக் காரியங்களும் தேவனுடைய அன்பைவிட்டு எங்களை பிரிக்கமாட் டாது. எப்படிப்பட்ட காரியங்கள் வந்தா லும் தேவன் எங்களை அன்பு கூராமல் இருககவேமாட்டார்.

## 04. யோனத்தானுடைய அன்பு ஒரு அசாதாரண அன்பாகவும், புதுமையான அன்பாகவும் இருந்தது Uncommon Love

**1சாமுவேல் 18:4 யோனத் தான் போர்த்துக் கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும் தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தை யும்,**

**தன் வில்லையும், தன்கச்சை யையும் கூடத்தாவீதுக்குக்கொடுத்தான்.** இங்கே நாம் பார்க்கிறோம், இந்த இளவரசனாகிய யோனத்தான் இளவரசனுக்குரிய <u>சகல அடையாளங்களையும</u> தாவீதுக்குக் கொடுத்து விட்டான். இளவர சனாகிய யோனத்தான் தன்னிடமிருந்த தனக்குரிய சகல உடமைகளையும் தாவீதுக்கு கொடுத்து விட்டான். இது எதனைக் காண்பிக்கின்றது என்றால்: ஒரு புதுமையான அன்பு, அசாதாரண அன்பு. சாதாரண அன்பு என்றால் ஒருவர் எம்மீது அன்பு கூர்ந்தால் நாமும் அன்பு கூருவோம். ஆனால் இது ஒரு அசாதாரண அன்பு. எல்லா எல்லைகளையும் தாண்டி ஒரு புதுமையான அன்பாக இருக்கின்றது.

இந்த அசாதாரண அன்பின் வெளிப்பாடு என்னவென்றால்: **1சாமுவேல் 23:17 நீர் பயப்பட வேண்டாம், என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக்கண்டு பிடிக்கமாட்டாது: நீர் இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிருப்பீர்: அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்: அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்.** பாருங்கள் இந்த அசா தாரண அன்பின் வெளிப்பாடு இங்கே காணப்படுகின்றது. நீர் ராஜாவாயிருப்பீர். இந்த அன்புக்கு அவன் தன் அடையாளங்களைக் கொடுத்தது மாத்திரமல்ல தன்னுடைய வாயினாலும் அதனை அறிக்கை செய்கின்றான். நீர் தான் அடுத்த ராஜா. ஆனால் இந்த வார்த்தையினாலோ இந்த வெளிப்பாட்டினாலோ யோனத்தான் எரிச்சலடைய வில்லை, பகைக்கவு மில்லை, கோபப்படவுமில்லை. தனக்கு வரவேண்டிய ராஜ்யபாரம் தாவீதிற்கு போய்விட்டது. யோனத்தான் எப்பொழுதும் தாவீதை முன் நிறுத்திக் கொண்டு வருகின்றான்.

பலவேளைகளிலே அனேகருடைய பிரசங்கங்கள் தாவீது ஒரு நல்ல தலைவன் என்பதனைக் காண்பிக்கும். ஆனால் யோனத்தான் ஒரு நல்ல தலைவன் என்பதனைக் காண்பிக்கும் பிரசங்கங்கள் அரிது. ஆனால் உண்மையிலே இந்த வார்த்தைகளை மிக ஆழமாய் படிப்போமாக இருந்தால் யோனத்தான் உண்மையான, முன்மாதிரியான, ஒரு எடுத்துக்காட்டான தலைவனாக இருந்து தாவீதை வழிநடத்துகின்ற தலைவனாகவும் இருந்தான். இங்கே மீண்டும் இயேசு கிறிஸ்துவினுடைய காட்சியினை பார்க்கலாம்:

யோனத்தான்ராஜஉடையைக கழற்றி ராஜாவுக்குரிய அந்த சகல அச்சடையாளங்களையும் ஏழையாகிய தாவீதுக்குக் கொடுத்தது போல இயேசுவும் தன்னுடைய மகிமையை விட்டு ஏழைகளாகிய எங்களுக்காக இறங்கி வந்தார். **பிலிப்பியர் 2:6-8 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.** இங்கே நாங்கள் ஆண்டவர் தன்னுடைய மகிமையை விட்டிறங்கிய செயற்

பாட்டை மிகத்தெளிவாக காண்கின் றோம். பாவிகளும், துரோகிகளும், ஒன்றுக்கும் உதவாத ஏழைகளுமா கிய எங்களுக்காக அவர் தன்னுடைய மகிமையைவிட்டு இறங்கி வந்தார். அவர் பாடுபட்டு மரித்துஅடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம நாள் உயிர்த் தெழுந்தார். தாவீதைப் போல பரம ஏழைகளாயிருந்தோம், பாவத்தில் பிறந்தவர்களாயிருந் தோம், ஒன்றுக் கும் உதவாதவர்களாய் இருந்தோம். **ஏசாயா 64:6 நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள போல இருக்கிறோம்:** ஆனால் இயேசு பூமிக்கு வந்து **ஏசாயா 61:10ᵇ அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார். எபேசியர் 2:7 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்க ளிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.**

ஆகவே பரமஏழைகளும், ஒன்றுக்குமே உதவாதவர்களும், வேண்டாதவர்களும், துரோகிகளும், சேற்றில் வாழ்ந்தவர்களுமாகிய எங்களை தன்னுடைய மகிமையை விட்டு இறங்கிய ஆண்டவர் தூக்கியெடுத்து இரட் சிப்பின் வஸ்திரத்தையும், நீதியின் வஸ்திரத்தையும் உடுத்தி உன்னதங் களிலே அவரோடேகூட உட்காரவும்செய்தார். ஆகவேபிரியமான தேவ ஜனமே யோனத்தான் காண்பித்த அன்பு இன்றைக்கு நாம் எங்களுடைய சக மனதர்களோடு காண்பிக்க வேண்டும். **எங்களுடைய போதக ரோடு காண்பிக்க வேண்டும். எங்களுடைய சபையோடு காண் பிக்க வேண்டும்.** இப்படி பலதரப் பட்ட விதமாக சொல்லிக் கொண்டே



போகலாம். அதை ஆண்டவர் எதிர் பார்க்கின்றார். இந்தச் சம்பவமும் வாசிப்பதற்கு இன்னொரு சம்பவ மாய் அமையா மல் **இது எங்களு டைய வாழ்க்கையிலே அப்பியாசப் படுத்துகின்றதான ஒரு வார்த்தை களாக இந்த வசனங்கள் இருக் கட்டும்.** நாங்களும் சிக்கலற்ற அன்பு காட்ட வேண்டியது அவசியம். நிபந்தனையற்ற அல்லது தாராள மான அன்பு காட்ட வேண்டியது அவசியம். அத்தோடு கூட புதுமையான அல்லாவிட்டால் அசாதரண மான அன்பு காட்ட வேண்டியது அவசியம்.

கடந்தநாட்களில்நடைபெற்ற உலகத்தலைவர்கள் மாநாட்டில் அம் மாநாட்டின் தலைவர் பில் கைபில்ஸ் என்ற தேவமனிதர் சொன்ன ஒரு காரியம்: **கிறிஸ்துவில் உண்மையான அன்பு வைத்திருந்தால் அதை எப்படி அறியமுடியுமென்றால் உன்னுடைய உள்ளூர் சபையிலே நீ வைத்திருக்கிற அன்பின் மூலமாகவே அறியமுடியும்.** சாதாரண அன்பு கொள்கிறவர்களாக அல்ல, நிபந்தனையற்ற, அசாதாரண மான அன்பைக காண்பிக்க வேண்டும். உதாரண மாக: சபை ஒருவருக்கு அவரது வீட்டுக் கூரை வேயும்படி உதவி செய்கின்றது. அவர்உடனடியாக சபை எனக்கு உதவி செய்துவிட்டது என்று மிகவும் சந்தோஷப்படுவார். அந்தக் காரணத்தினாலேயே சபையில் அன்புகூருவார்கள். ஆனால் ஆண்ட வர் எதிர்பார்க்கிற அசாதாரண புதுமையான அன்பு சபை எமக்கு அந்த உதவி செய்தாலும் அல்லது எந்த உதவியும் செய்யாவிட்டாலும் அன்பு செலுத்த வேண் டும். இதனைத்தான் Rev. Bill Hybels குறிப் பிட்டார்.

கிறிஸ்துவிலே வைத்திருக் கும் அன்பை நமது உள்ளூர் சபையில் வைத்திருக் கும் அன்பின் மூலம் அறிந்து கொள்ளலாம்.


ஆகவே தேவஜனமே எங்க ளிடம் யோனத்தான் தாவீதுக்குக் காண்பித்த அன்பு அவசியமாக தேவை. இது சபை, போதகர், சகவிசு வாசிகள் மீதே இருக்க வேண்டும். சிக்கலில்லாத அன்பு காட்ட வேண்டும். கொடுக்கும் அன்பு காட்ட வேண்டும். தாராளமான அன்பு காட்டவேண்டும். அது மாத்திரமின்றி புதுமையான அன்பு செலுத்த வேண்டும். சந்தோ ஷமான செய்தி என்னவென்றால்: ஏழையாகிய தாவீதை நேசிக்க ஒரு இளவரசன் இருந்தது போல **என்னை யும் உங்களையும் நேசிக்க ராஜாதி ராஜா ஒருவர் இருக்கிறார்.** எப்படிப் பட்டவர்களாயும், பரம ஏழைகளா யும், துரோகிகளாயும் இருக்காலம். ஆனால் அவர் எங்களை நேசிக்கிற ஆண்டவராக இருக்கின்றார்.

யோனத்தான் தாவீதை உள்ளும்புறமும்முழுவதுமாக சிநேகித தான். அவனுடைய சிநேகம் எப்படி இருந்தது? ஸ்திரிகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது. **11சாமுவேல் 1:26 என் சகோதரனா கிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்: நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய். உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது. ஸ்திரிக ளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிக மாயிருந்தது.** யோனத்தானுடைய அன்பு சிககலற்ற, கொடுக்கும், நிபந்தனையற்ற தாராள, அசாதாரணமான புதுமையான அன்பாக இருந்தது.

தானோடு ஆலோசனை பண்ணுகி பிரியமானவர்களே நாங்களும் நன்றி யறிதல் உள்ளவர்களாய் இருப் போம். யோனத்தானைப் போல அவன் எவ்விதமாக தலைவனாக எங்களுக்கு வழிகாட்டுகின்றானோ அந்த வழிகாட்டலைத் தொடர்ந்தவா களாக சிக்கலற்ற அன்புகூரவேண் டும். எங்களுடைய அன்பு நேர்கே டாக மாத்திரமல்ல, சமாந்தரக் கோடாக இருக்க வேண்டும். நேர்கோடு என்று சொன்னால் தேவனோடு சமாந்தர மாக என்று சொன்னால் சபையோடு, சக மனிதர்களோடு இருக்க வேண்டும. எங்களுடைய சிக்தலற்ற அன்பு நேர்கோடாகவும் சமாந்தரமாகவும், நிபந்தனையற்ற அன்பு நேர்கோடா கவும் சமாந்தமாகவும், எங்களு டைய புதுமையான அசாதாரண அன்பு நேர்கோடாகவும் சமாந்தரமா கவும் இருக்கிற பொழுது நிச்சயமா கவே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப் பார். கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுடையபங்காகமாறும். அவருடைய வருகை மிகவும் சமீப மாயிருக்கின்றது!

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் ஜோஹணன் டி. பிலிப**
**நிறைவேற்றுப்போதகர்,**
**சீயோன் தேவாலயம்,**
**யாழ்ப்பாணம்.**



# குறுக்கெழுத்துப்போட்டி – 42

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | 7 |
| | ■ | ■ | | ■ | | 6 |
| | ■ | 8 | 3 | | 4 | |
| 5 | | | ■ | 11 | | ■ |
| | ■ | | ■ | 9 | ■ | |
| | | | 10 | ■ | 13 | |
| | ■ | ■ | | | | 12 |

## இடமிருந்து வலமாக

1. தாவீதை மிகவும் நேசித்த இளவரசன்.
3. நீரோடைகளை வாஞ்சித்து கதறுபவை.
5. இவர்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளே! என தூதன் மரியாளுக்கு சொன்னான்.
11. ஆரோன் தூப கலசத்துடன் செத்தவர்களுக்கும் உயிரோடிக்கிறவர்களுக்கும் நடுவில் நின்ற போது இது நிறுத்தப்பட்டது.
13. எமக்காய் இயேசுவின் சரீரம் ................ப்பட்ட தரைபோல காணப்பட்டது.

## வலமிருந்து இடமாக

3. ஸ்திரிகளை இப்படியும் சொல்லலாம்.
6. உத்திரத்தை இப்படியும் சொல்லலாம்.
10. ........................க்காரன் வருகிறான் என்றனர்: யோசேப்பின் சகோதரர்கள்.
12. தேவன் மனிதன் மீது கொண்ட இதனால் அவனைத் தேடி வந்தார்.

## மேலிருந்து கீழாக

1. இயேசுவை தேவஆட்டுக்குட்டி என சொல்லிய மனிதன்
2. .................ய் இருக்கிறேன், என்றார் இயேசு
4. தாவீது ராஜா தன் பாவத்தை உணரும்படி நாத்தான் ஆட்டுக்குட்டியின் இதைச் சொன்னான்.
7. தெபோராள் .................... ஒரு நியாயாதிபதி.
8. சோதோமை விட்டுப் போகும்படி கர்த்தருடைய தூதன் லோத்தை ............ படுத்தினான்.
10. இயேசு பேசிய ஒவ்வொரு.................................லும் சத்தியமானது.
13. ............................ பாவங்களை மன்னிக்க இயேசு ஆயத்தமாய் இருக்கிறார்.

## கீழிருந்து மேலாக

4. தானியேலும் அவனுடைய நண்பர்களினதும் முகங்கள் இது உள்ளதாய் காணப்பட்டது.
9. பத்மு தீவில் தரிசனம் பெற்றவன்.
12. நாம் அவரைப் பார்க்கும் போது ........... அவருக்கு இதுவும் இல்லை சௌந்தரியமுமில்லை என்று வேதம் சொல்லுகிறது.

## குறுக்கெழுத்துப் போட்டி – 41 சரியான பதில்கள்

*இடமிருந்து வலமாக*

01. ஆகாஸ்வேரு
03. தோதோ
05. எலியா
06. பவுல்
10. மாராவில்

*வலமிருந்து இடமாக*

02. ஏமான்
04. சனகெரிப்
08. லாபான்
12. காயின்

*மேலிருந்து கீழாக*

01. அர்தசஷ்டா
02. ஏதோம்
04. சன்பல்லாத்
07. தென்றல்
09. சோ

*கீழிருந்து மேலாக*

03. தோமா
05. எலிப்பாஸ்
11. ராகேல்
12. காபிரியேல்

## வினாவிடை – 43 சரியான பதில்கள்

01. ஒபதியா (1இரா 18:12)
02. தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறவன் (நீதி 8:36)
03. முப்பத்து எட்டு வருஷம் வியாதியாய் இருந்தவன் (யோவான் 5:5)
04. உன்னதப்பாட்டு (உன்னத 2:17)
05. யோபு (யோபு 3:26)
06. கர்த்தருடைய கண்கள் (11நாளா 16:)
07. துன்மார்க்கரின் நாவு (சங்கீ 73:9)
08. சவுல் உ ராஜ்யபாரம் (1சாமு 9:1உ27)
09. எண்ணை (சங் 104:15)
10. மனமகிழ்ச்சி (நீதி 15:13)



## வினாவிடை – 43 சரியான விடை எழுதியவர்கள்

01. தி.ஜெகா - மயிலங்காடு
02. சூ.ஜான்சினி - நாவற்குழி
03. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
04. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
05. றொ.அஜந்தன் - ஊர்காவற்றுறை
06. து.கிருஸ்ணகுமார் - ஊர்காவற்றுறை
07. க.ஜெனிலா - ஊர்காவற்றுறை
08. ம.ரீகா - ஊர்காவற்றுறை



## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர் :-..............................................................

விலாசம் :-..............................................................

..............................................................

..............................................................

..............................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To: ..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**